6th August 1965]

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : முந்திரி உற்பத்தி செய்வதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தரிசாக கிடக்கிற செம்மண் பகுதி நிலங்களில் அரசாங்கம் நேரடியாக ஏதாவது முந்திரி பயிர் செய்யமுடியுமா?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : இதைப்போன்று அடுத்த ஜில்லாக்களிலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிரிடவேண்டுமென்று திட்டம் வகுத்திருக்கிறேம். எங்கெங்கு செய்யப்படுமென்று இப்போது சொல்வதற்கில்லை.

Agricultural Co-operative Banks and Co-operative Credit Societies

* 66 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the rate of interest on which loans were granted to Agricultural Co-operative Banks and Co-operative Credit Societies during 1961–62;

(*b*) the rate of interest at present; and

(*c*) the reason for converting the short-term loan to a shorter term loan?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : (அ) 1961-62-ல் வேளாண்மைக் கூட்டுறவு பாங்குகளுக்கும், கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களுக்கும் வழங்கிய குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களுக்கு முறையே 5 சத விதமும், 6 சத விதமும் கூட்டுறவு மத்திய பாங்குகள் வட்டி வாங்கி வந்தது.

(இ) வேளாண்மைக் கூட்டுறவுப் பாங்குகளுக்கும், கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்களுக்கும் இப்போது வழங்குகிற குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களுக்கு முறையே 6.7 சத விதமும், 7.95 சத விதமும் கூட்டுறவு மத்திய பாங்குகள் வட்டி வாங்குகின்றன.

(உ) இச் சங்கங்கள் தமது அங்கத்தினர்களுக்கு வேளாண்மை உற்பத்திச் செலவுக்காகக் குறுகிய காலக் கடன்கள் வழங்குகின்றன. இந்தக் குறுகிய காலக் கடன்கள் ஓராண்டுக்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். இப்போது "பயிர்ப் பட்டத்தில்" மட்டுமே இக் கடன் வழங்கப்பட்டு வசூலிக்கப் படுகிறது. இக் கடன்களை, மாசூல் விற்றுக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதால், இவற்றைத் திருப்பிச் செலுத்தும் கால அளவு சாகுபடி செய்த பயிர்களின் கால அளவைப் பொறுத்து, அறுவடைக்குப் பின் மாசூலை விற்பதற்குச் சுமார் இரண்டு மாதம் தள்ளி நிச்சயிக்கப்படுகிறது. ஆகவே, பெரும்பான்மையான பயிர்களின் சாகுபடிச் செலவுக்காக வழங்கும் இவ் வகைக் கடன்கள் ஓராண்டுக்கும் குறைந்த காலக் கடன்களாகும்.

[6th August 1965

SRI M. SUBBIAH CHETTIAR: Sir, are the Government aware that the policy of collecting the loan amounts, both the short and long term loans, after one year from the harvest, has been changed and the ryots are forced to pay the amount within two months of the harvest, even though they are not able to sell the produce within such a short time?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : சார், ஆரம்பக் கேள்விக்கு பதில் சொல்வதில் விளக்கம் கொடுக்கப்பட்டது. வேளாண்மையைப் பொறுத்துத்தான் கடன் கொடுக்கிறோம். வேளாண்மைக்கு நான்கைந்து மாதங்கள் என்று வைத்துக் கொண்டால் அதற்குப் பிறகு இரண்டு மூன்று மாதங்கள் அவற்றை விற்பனை செய்வதற்கு காலமளித்துத்தான் கேட்கப்படுகிறது. அதைப் பார்க்கும்போது ஒவ்வொரு ஆண்டுக்கும் குறைவாகத் தான் இருக்கும்.

SRI M. SUBBIAH CHETTIAR: Sir, some three or four years ago the ryots paid the loan instalments after a year from the harvest, whether it was single crop, double crop or triple crop land. But now the Government insist that immediately after the harvest, the ryots must pay the amount. The ryots fell that it is impossible for them, and it will not be in their interest. So will the Government revise their policy and give them one-year loan?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : நான் சொல்லியது போல குறுகிய காலக் கடன் என்று கேட்கும்போது பயிரைப் பொறுத்துத்தான் கொடுக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பார்த்துவிட்டுத்தான் அந்த முறையில் செய்தார்கள். இப்போது விளைச்சலை அடிப்படையாக வைத்து கடன் கொடுக்கிற நிலைக்கு அதுதான் காரணம். விவசாயிகளுக்கு விவசாயம் செய் வதற்கு அவசியமாகக் கடன் கொடுக்க வேண்டும்.

SRI M. SUBBIAH CHETTIAR: Is it not the object of the Government that the ryots should be enabled to get the maximum benefit by keeping back the stocks for some time after harvest when they can get better prices instead of asking them to pay the loan amount within two months even though they are not able to get better prices at that time?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : இதற்கெல்லாம் மார்க்கெட்டிங் சொசைடி இருக்கிறது. அதன் மூலமாகக் கொடுக் கலாம். புரகியூர்மெண்டு எந்தவகையிலும் அடைந்திருக்க வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : பயிரை முன்னிட்டுக் கடன் கொடுப்பதில் வேளாண்மை முடிகிறபோது கடன் செலுத்துவது முறையாக இருந்தாலும் பயிரின் விளைவு பூச்சி முதலியவைகளால் பாதிக்கப்படுகிற சில பகுதிகளுக்கு காலத்தை நீட்டிக் கொடுக்க அரசாங்கம் வகை செய்யுமா?

6th August 1965]

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார். அது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. உத்தரவு போடவேண்டிய அவசியம் இருக்காது. அங்கங்கு உள்ள மத்திய பாங்கைச் சேர்ந்தவர்கள் அதைச் செய்வார்கள். அத்தியாவசியம் ஏற்படுகிறதென்றால் பாங்கின் டைரக்டர்கள் இருக்கிறார்கள். அதைத் தள்ளிக் கொடுப்பார்கள்.

Agricultural Co-operative Banks

* 67 Q.—Sri N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the reason for enhancing the share amount from 10 per cent to 15 per cent for raising a loan in the Agricultural Co-operative Banks; and

(*b*) the reason for collecting a thrift deposit too?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : (அ) இந்தச் சங்கங்களின் சொந்த நிதியை அதிகப்படுத்தி, இவை வெளியே கடன் பெறுவதைக் குறைப்பதற்காக, அவற்றின் ஒவ்வொரு அங்கத்தினரும் செலுத்தும் பங்குமூலதனம் அவர் வாங்குகிற கடனில் 10 சத விகிதமாக இருக்க வேண்டுமென்பதைப் படிப்படியாக 20 சத விகிதத்துக்கு உயர்த்தும்படி அவைகட்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.

(இ) கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்றின் முக்கிய நோக்கம் அங்கத்தினர்களுக்குத் தேவையான உற்பத்திக் கடன் வழங்குவதோடு அவர்களிடையே சிக்கனப் பழக்கத்தை வளர்ப்பதேயாகும். நாளடைவில் குடியானவர்கள் கடன் வாங்கும் பழக்கம் சிறிது சிறிதாகக் குறைய வேண்டும். இவர்களிடையே சிக்கனப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகவே, வேளாண்மைக் கடன் சங்கங்களில் சிக்கன டிபாசிட் நிதிக்கெனக் கட்டாயமாகத் தொகை செலுத்தும் முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : விவசாயிகளுடைய நிதி நிலைமை இப்போது திருப்தியாக இல்லாதிருப்பதால் இந்த மாதிரி யோசனைகளை சிறிதுகாலம் ஒத்திப் போட அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : இது எல்லாமே ரிசர்வ் பாங்கு கண்டிஷனைப் பொருத்தது. அங்கெல்லாம் இந்த மாதிரி செய்யவேண்டுமென்று அவர்களுடைய விதிமுறைகளின்படி செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு பாங்கும் நிதிக்காக சர்க்காரை அதிகமாக எதிர்பார்ப்பதைவிட அங்கங்கு டெபாசிட் செய்ய வழி ஏற்படவேண்டுமென்றுதான் இது செய்யப்பட்டது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : ரிசர்வ் பாங்கு சாதாரணமாக எந்த பாங்காக இருந்தாலும் தொந்தரவு கொடுக்கிறார்கள் என்பது உண்மைதான். விவசாயிகள் என்ற காரணத்தால் விவசாய பாங்குகளுக்கு இந்த சலுகை பெற அரசாங்கம் யோசிக்குமா ? இது பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?